## தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே ஏற்படும்

# மின்தடை உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்!

### முன்னாள் மின்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் – த.வெ.க. அரசுக்கு வலியுறுத்தல்!



அரியலூர்,மே 24-

அரியலூரில் முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சரும் குன்னம் சட்டமன்ற உறுப்பினருமான, எஸ்.எஸ்.சிவசங்கர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், அவர் தெரிவித்தாவது.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் தொடர்ந்து மின்வெட்டு புகார், சமூக வலைதளங்களில் எழுந்து வருகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதே பிரச்சினை தொடர்கிறது. இது குறித்து அரசியல் ரீதியாக யாரும் விமர்சனம் செய்யவில்லை.

சமூக வலைதள குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்கின்ற வகையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் அவர்கள் இந்த துறையின் கடன், ஊழியர்கள் பற்றாக்குறை குறித்து பலவகையில் பேசுகிறார்.

ஆட்சி அமைந்து ஏறக்குறைய 20 நாட்கள் ஆகிவிட்டது. மின் பற்றாக்குறை இருக்கிறதா? என இது வரை ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தி, உரிய முடிவெடுத்து செயல்படுத்தி இருந்தாலே, இந்த பிரச்சனைகள் இருக்காது.

ஆனால், இதே பணியாளர்கள் பற்றாக்குறை, இதே கடனோடுதான் முன்னாள் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் திமுக அரசு, கடந்த 5 ஆண்டு காலத்தில் மின் பற்றாக்குறை மற்றும் எந்த பிரச்சினையும் இல்லாமல் தமிழ்நாட்டிற்கு சரியான முறையில், சீரான முறையில் மின்சாரம் வழங்கி வந்தது.

ஆனால், ஏதோ புதிதாக இப்பொழுது அவர்கள், வேறு உலகத்திற்கு வந்தது போல பேசுகிறார்கள். இது ஒன்றிய அரசின் குரலாக உள்ளதா? என சந்தேகம் எழுகிறது.

ஒன்றிய அரசு தான் மொத்த தமிழ்நாட்டை மாத்திரமல்ல, இந்தியாவையே தனியார் மையமாக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆளுகின்ற பல்வேறு மாநிலங்களில் ஏற்கனவே தனியார் வசம் மின்துறையை ஒப்படைத்தது போல, இந்தியாவின் ஏனைய மாநிலங்களையும் ஒப்படைக்க வேண்டும் என்று ஒரு சில அமைச்சர்களைக் கொண்ட கூட்டத்தை நடத்தி முயற்சித்து வந்தார்கள்.

ஆனால் எங்கள் தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து இதுகுறித்து எதிர்க்குரல் எழுப்பியும், கடிதம் எழுதியும் தமிழ்நாட்டின் சார்பாக அதற்கு எதிராக பதிவுகளையும் எதிர்ப்பையும் பதிவு செய்து வந்தார்கள்.

ஆனால், இன்று பொறுப்பேற்று இருப்பவர்கள், பொறுப்பேற்றுள்ள இத்தனை நாட்களுக்குள் அதற்கான தீர்வு என்ன? என்பதை பார்க்காமல், கடந்த ஆட்சியை குறை சொல்வது போலவும், புதிதாக ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது போலவும் பேசிக் கொண்டிருப்பது தேவையில்லாத ஒன்று.

மக்கள் உங்களிடம் பவரை கொடுத்துள்ளனர். பவர் கட் கூடாது என்றே மக்கள் கேட்கின்றனர். அதற்கு என்ன வழி என்பதை பார்த்தாலே போதும்.

தமிழ்நாடு மின் துறையில் பணிபுரியும் அலுவலர்கள், மிகச் சிறப்பான அலுவலர்கள். இந்தியாவிலேயே சிறந்த முறையில் பணி செய்யக்கூடியவர்கள் அவர்களுக்கு தெரியும். எந்த பிரச்சினையை எப்படி தீர்க்க வேண்டும் என தெரியும். அவர்களை அழைத்துப் பேசினால் மக்களுக்கு சிரமம் அளிக்க முடியாமல் இருக்கலாம்.

ஆனால், இவர்கள்ஏதோ உள்நோக்கத்தோடு ஒன்றிய அரசின் குரலாக இருப்பது போல தோன்றுகிறது.

எனவே மக்களுக்கான பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்த அரசு உடனடியாக முன்வர வேண்டும் மக்கள் கேட்பதெல்லாம் தடையற்ற மின்சாரம் அதை வழங்குவதற்கு முதலில் இவர்கள் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு முன்னாள் மின்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வீடியோ வெளியிட்டு த.வெ.க. அரசுக்கும், மின்துறை அமைச்சர் நிர்மல் குமாருக்கும் அறிவுரை கூறியுள்ளார்.

## சி.பி.எஸ்.இ. மாணவர்களுக்கு மும்மொழிப் பாடத்திட்டம் அமல்!

# எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு!

### அடுத்த வாரம் விசாரணை!

புதுடெல்லி,மே.24-

சி.பி.எஸ்.இ. மாணவர்களுக்கு மும்மொழி பாடத்திட்டம் அமல்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கு அடுத்த வாரம் விசாரணைக்கு வரவுள்ளது.

மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, சி.பி.எஸ்.இ. 9,10 ஆம் வகுப்பில் மும்மொழி பாடத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி அமர்வில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில் ஒன்பதாம் வகுப்பு சி.பி.எஸ்.இ. மாணவர்களுக்கு திடீரென்று மூன்று மொழி பாடத்திட்டத்தை அறிவித்துள்ளனர் என்றும், மாணவர்கள் எப்படி கூடுதலாக ஒரு மொழிப் பாடத்தை படிக்க முடியும்? என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பத்தாம் வகுப்பில் மாணவர்கள் அந்த பாடத்தில் எப்படி தேர்வு எழுத முடியும்? இது மாணவர்களின் கல்வியை சிதைக்கும் செயல் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அப்போது அடுத்த வாரத்தில் வழக்கை விசாரிப்பதாக தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு அறிவித்துள்ளது.

# கலைஞர் நகர் தெற்கு - வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிக்கை!

சென்னை, மே. 24-

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே. கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்ரமணியன் ஆலோசனைப்படி, கலைஞர் தெற்குப் பகுதி ஆலோசனைக் கூட்டம், 32/77, அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர், நகர் என்ற முகவரியில் உள்ள கலைஞர் நகர் தெற்குப் பகுதிக் கழக அலுவலகத்தில் இன்று (24.05.2026) மாலை 7 மணி அளவில் நடைபெறுகிறது.

பகுதி அவைத்தலைவர் எஸ்.உமாபதி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாநகராட்சி கணக்குநிலைக் குழுத் தலைவர் க. தனசேகரன் மாநில வர்த்தகரணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர்.

பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், பிஎஸ். முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகிபாண்டியன் முன்னிலை யில் நடக்கும் இக்கூட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர்கள். பகுதிக் கழக நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## செய்யறிவு உலகில் செம்மொழித் ‘தமிழும் தமிழரும்’ எனும் தலைப்பில்

# கனடாவில் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு!

### முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் கருத்துரை வழங்குகிறார்!

சென்னை, மே.24–

”செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும் என்கிற தலைப்பில் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு கனடா நாட்டில் அக்டோபர் 15, 2026 தொடங்கி அக்டோபர் 18, 2026 வரை டொரன்டோ மாநகரத்தில் நடத்த அனைத்துலகத் தமிழர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. அந்த மாநாட்டில் நடைபெற உள்ள ஆய்வரங்கத்திற்கு அனைத்து நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்களிடம் ஆய்வுக்கட்டுரைகள் கோருவதற்கான அறிவிப்பினை ஊடகத்தின் மூலமாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

மாநாட்டின் செயல் நெறிக்குழுத் துணைத்தலைவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம். இராசேந்திரன் ஆய்வரங்கக் குழுத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத் துறைப் பேராசிரியர் நல்லூர் சரவணன், ஆய்வரங்கக் குழுவின் உறுப்பினர்களான அண்ணா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பெ.காளிராஜ், சென்னைப் பல்கலைக்கழக மேனாள் பதிவாளர் பேராசிரியர் சீனிவாசன், தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் மு. இராமசாமி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை மேனாள் பேராசிரியர் ஒப்பிலா மதிவாணன், ஆகியோர் ஊடகத்தில் கருத்துரைக்க உள்ளனர். எனவே அனைவரும் கலந்து கொள்ள அழைக்கி றோம்.

இவ்வாறு பேராசிரியர் சைவ சித்தாந்தத்துறை சென்னை பல்கலைக் கழக முனைவர் நல்லூர் சா.சரவணன் கேட்டுக் கொண்டுள்ளார்.



நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜ்6 கீழ்கோத்தகிரி ஒன்றிய பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் சென்று வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் ஒத்தக்கடை அருகே உள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அருகில் முன்னாள் அமைச்சர் மெய்ய நாதன் ,மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மற்றும் கழக நிர்வாகிகள் அந்தநல்லூர் துரைராஜ், கருணை ராஜா, காஜாமலை, விஜய், குடமுருட்டி சேகர், டோல்கேட் சுப்பிரமணி, கமல், முஸ்தபா, மோகன்தாஸ், பி.ஆர்.பாலசுப்பிரமணியன், கலைச்செல்வி. ராமதாஸ். புஷ்பராஜ். குமரவேல். கருப்பையா, சிந்தை பாலமுருகன் வழக்கறிஞர்கள் அந்தோணி கவியரசன் மணிபாரதி வீரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொள்கை எதிரிகளிடம் எப்படி நடந்துகொள்கிறது?

# புதிய ஆட்சியை தமிழ்நாடு உற்று நோக்குகிறது!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 24-

பதவியேற்ற அமைச்சர்களுக்கு வாழ்த்துகளைத் திராவிடர் கழகம் தெரிவித்துக் கொள்கிறது என்றும், விமர்சனங்களை எழுப்புவது எதிர்க்கட்சிகளின் உரிமை என்ற நிலையில், அது தரந்தாழ்ந்த நிலைக்குப் போய்விடக்கூடாது என்பதில் கவனச்சிதறல்கள் இன்றி நடந்துகொள்ள வேண்டும் என்று தனது கட்சியினருக்கு அறிவுறுத்தி ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சித் தலைவராக நடந்துவரும் பண்பாளர் மு.க.ஸ்டாலின் அவர்களது நயத்தக்க நாகரிகத்திற்குச் சரியான எடுத்துக்காட்டாகும் என்றும், புதிதாகப் பொறுப்பேற்ற ஆட்சி, அதன் கொள்கை எதிரிகளிடம் எப்படி நடந்துகொள்கிறது என்பதைத் தமிழ்நாடு உற்று நோக்குகிறது என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் ஜோசப் விஜய் தலைமையில் முழு அமைச்சரவை 35 பேர் கொண்டதாக அமைந்துள்ளது. நேற்றைய (22.5.2026) பதவியேற்புடன் சேர்த்து மூன்று நிகழ்வுகள் முடிந்து, அமைச்சர்களின் துறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பொறுப்பு ஆளுநர் பிடிவாதம் காட்டிய நிலையில், ஆளுங்கட்சிக்கு மக்கள் அறுதிப் பெரும்பான்மை அளிக்காத நிலையில், 108 இடங்களை மட்டுமே பெற்றது அக்கட்சி.

**புதிய ஆட்சிக்குத் தங்களது ஆதரவை —**

**நிபந்தனையற்றுத் தருவது என்று அறிவித்தனர்!**

அதிலும் ஜோசப் விஜய், இரு தொகுதிகளில் வெற்றி பெற்றதால், நடைமுறையில், அதன் எண்ணிக்கை 107 தான் என்ற நிலையில், தமிழ்நாட்டில் மீண்டும் மறைமுகமாகவோ, நேரிடையாகவோ ஆளுநர் (அ) குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது, யார் வரவேண்டுமென்பதைவிட, யார் வரக்கூடாது என்பதில் உறுதி காட்டியதால், தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று, தலா இரண்டு இடங்களில் வெற்றி பெற்ற இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளும், விடுதலைச் சிறுத்தைகளும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் தி.மு.க. தலைமையின் கருத்தறிந்த நிலையில், தங்கள் முடிவுகளை வெளியிட்டனர். பிறகு புதிய ஆட்சியான த.வெ.க. ஆட்சிக்குத் தங்களது ஆதரவை—நிபந்தனையற்றுத் தருவது என்று அறிவித்தனர்.

விடுதலைச் சிறுத்தைகள், அதன் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில், நீண்ட விவாதங்களைக் கட்சிக்குள் நடத்தி, புதிய முதலமைச்சர் அழைப்பை ஏற்று, ஓர் அமைச்சர் பதவியை ஒப்புக்கொள்வது என்று முடிவு எடுத்தனர்.

அதுபோல, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அமைப்பும் விவாதித்து, புதிய அமைச்சரவையில் சேருவது என்று முடிவெடுத்தது. நேற்று (22.5.2026) விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திண்டிவனம் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் வன்னிஅரசு அவர்களுக்கு சமூக நீதித் துறை (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை)யும், தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதியில் வெற்றி பெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் அ.மு. ஷாஜகான் அவர்களுக்கு சிறுபான்மையினர் நலத்துறையும் கொடுக்கப்பட்டுள் ளது.

அதன் மூலம் தற்போது ஜோசப் விஜய் தலைமையில் உள்ள கூட்டணி ஆட்சிக்கு அறுதிப் பெரும்பான்மைக்கு மேலே இரண்டு இடங்கள் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது!

சமத்துவ, சமூக நீதிக்கும் எதிரானதாக அமைந்துவிடக் கூடாது என்பதால்தான்...

அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்கும் உரிமை முதலமைச்சருடையது என்ற உண்மை அறியாதவர்கள் அல்ல நாம். அது முக்கிய லட்சியங்களுக்கு, ஜாதிதீண்டாமை ஒழிப்புக்கும், சமத்துவ, சமூக நீதிக்கும் எதிரானதாக அமைந்துவிடக் கூடாது என்பதால்தான், நாம் இந்து சமய அறநிலையத் துறைக்குப் பார்ப்பனர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதையும், அதன் துறை அதிகாரியும் பார்ப்பனராகவே அமைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினோம்.

50 ஆண்டுகள் சட்டப் போராட்டம் தி.மு.க. ஆட்சிகளில் நடந்து, உச்சநீதிமன்றத்தில் வெற்றி பெற்று — ஜாதி, தீண்டாமை ஒழிப்புத் திட்டமான அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் திட்டத்தை மேலும் தொடரவேண்டிய பணிகளில் தொய்வு ஏற்படுத்தும் என்பதை முன்னெச்சரிக்கையாகச் சுட்டிக்காட்டினோம்.

இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, வருமுன் காப்பது அவசியம் என்பதால், சுட்டிக்காட்டியதற்கு — அவர்களுடைய செயல்முறை எப்படி என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்! (முதன்மைச் செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார் என்ற செய்தி நேற்று (22.5.2026) வந்திருக்கிறது. வரவேற்கத்தக்கது)

**நமது இனிய வாழ்த்துகள்!**

பதவியேற்ற அமைச்சர்களுக்கும், குறிப்பாக தி.மு.க. கூட்டணியிலிருந்து, அதன் மதச்சார்பின்மை பட்டுப்போகக் கூடாது; ஆர்.எஸ்.எஸ். — பா.ஜ.க. ஆட்சிக்கு வழியேற்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தோடும் பதவியேற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் அமைச்சர் நண்பர் வன்னிஅரசு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் அமைச்சர் அ.மு.ஷாஜகான் அவர்களுக்கும் நமது இனிய வாழ்த்துகளைத் திராவிடர் கழகம் தெரிவித்துக் கொள்கிறது!

அதேநேரத்தில், அ.மு. ஷாஜகான் அமைச்சரானவுடன், அறையில் ‘துவா’ செய்த நடப்பு மதச்சார்பின்மைக்கு எதிரானது என்பதை இஸ்லாமிய நண்பர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். இது ஒரு தவறான நடப்பு- இனி இது போன்று நடவாமல் பார்த்துக் கொள்ள முஸ்லிம் லீக் தலைமை அறிவுறுத்த வேண்டும்.

புதிதாகப் பொறுப்பேற்ற ஆட்சி, அதன் கொள்கை எதிரிகளிடம் எப்படி நடந்து கொள்கிறது என்பதைத் தமிழ்நாடு உற்று நோக்குகிறது!

வெற்றி போதைதான் ஆட்சிக்கு முதல் எதிரி — எதிர்க்கட்சிகள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

‘ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சி’ என்ற நிலைப்பாடு எடுத்துள்ள தி.மு.க.வின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு, ஜனநாயகத்தின் முட்டுச் சந்தில் சிக்கிக் கொள்ளாமல், ஆளுங்கட்சிக்கு மிகுந்த தன்னடக்கம் தேவை.

ஊடகப் பிரிவினரும், அரசியல் முதிர்ச்சி அடையாத சில ‘அவசர’ங்களும், தி.மு.க. கூட்டணியிலிருந்து பலரும் வெளியேறி, அதனை பலவீனமடையச் செய்து, தி.மு.க.வைத் தனிமைப்படுத்திவிட்டதாக ‘அற்ப’ சந்தோஷத்துடன் செய்திகளைப் பரப்புகின்றனர்!

**பலவீனமடையாது – ‘பேருரு’ எடுக்கும்!**

தி.மு.க. ஒருபோதும் இது போன்ற மாறுதலால் பலவீனம் அடையாது; மேலும் பலத்துடன், அதன் வளர்ச்சியில் ‘பேருரு’ எடுக்கும் என்பதை அனுபவ அறிவுடையவர்கள் அறிவார்கள். அதன், கடந்த கால சரித்திரம் அதற்குத் தக்க சான்று.

பல நேரங்களில், மவுனமான புன்னகை - பல மணி நேர பதற்ற ஆவேச பேச்சின் பதிலைவிட, மிகப்பெரிய சக்தி வாய்ந்தவை!

அரசியல் காற்று, ஒரே திசையில் என்றும் அடிப்பதில்லை என்பதை அனுபவத்தால் பழுத்தவர்களுக்கு என்றும் புரியும்!

**நயத்தக்க நாகரிகத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு!**

விமர்சனங்களை எழுப்புவது எதிர்க்கட்சிகளின் உரிமை என்ற நிலையில், அது தரந்தாழ்ந்த நிலைக்குப் போய்விடக்கூடாது என்பதில் கவனச்சிதறல்கள் இன்றி நடந்து கொள்ள வேண்டும் என்று தனது கட்சியினருக்கு அறிவுறுத்தி ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சித் தலைவராக நடந்துவரும் பண்பாளர் மு.க.ஸ்டாலின் அவர்களது நயத்தக்க நாகரிகத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு ஆகும்.

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.




கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் வட கோவை குறுக்குவெட்டு சாலையில் அமைந்துள்ள ”மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.முருகன், மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் மாரிச்செல்வன் உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.